# தேடுவோர்

## வேத ஆராய்ச்சி பாடம்

# SEEKERS

Bible Study Course




Printed & Distributed by

**J.C. SCHOOL OF EVANGELISM**

MADURAI (INDIA)

E-mail : obey2jesus@gmail.com

இப்பாடங்களை படித்து முடிப்பவர்களுக்கு

பைபிள் பரிசு காத்திருக்கிறது

**Seekers** **(Tamil)** : 7th Printing, August 2015
Copy right @ J.C. School of Evangelism (Madurai)

Layout, Translation & Proof Reading
Kingsly Rajah, Antony Raj

Published & Printed For
**CHOATE BIBLE CORRES. COURSE INSTITUTE**
by
**P.C. PHILEMON RAJAH**
(Director, J.C. School of Evangelism)

பிரதிகள் கிடைக்கும் இடம் :
**கிருபையுள்ள வார்த்தை**
45 C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி, மதுரை – 625 016.
போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com
Visit : www.graciousword.org

# தேடுவோர்

## வேத ஆராய்ச்சி பாடம்

## பொருளடக்கம்


| பாடம் | பக்கம் |
|---|---|
| 1. பைபிள் (The Bible) | 7 |
| 2. இயேசு - தேவனுடைய தெய்வீகக் குமாரன் (Jesus - The Divine Son of God) | 13 |
| 3. பாவம் என்னும் பிரச்சனை (The Problem of Sin) | 18 |
| 4. பாவத்திலிருந்து இரட்சிப்பு (Salvation from Sin) | 23 |
| 5. தண்ணீர் ஞானஸ்நானம் (Water Baptism) | 29 |
| 6. சபை (The Church) | 33 |
| 7. உண்மையான தொழுகை (True Worship) | 39 |
| 8. கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு (New life in Christ) | 45 |

# அறிமுகம்

பைபிள் என்ன சொல்லுகின்றது என்று நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால், அதற்கு தனிப்பட்ட வேத படிப்பைவிட, வேறு சிறந்த வழியேயில்லை. **முதலாவது,** உங்கள் பைபிளை வாசியுங்கள்.

**இரண்டாவதாக,** பைபிள் என்ன போதிக்கின்றது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள, முறையாக கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு வேத பாடத் திட்டத்தைத் தேர்வு செய்யுங்கள். அப்படித் தேர்வு செய்யும்பொழுது கூட, அந்த வேத பாடத்திட்டம் முழுமையாக பைபிளின் அடிப்படையில் உள்ளதா என்றும், தெளிவாகவும் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் உள்ளதா என்றும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

சில ஆண்டுகட்குமுன் நான் பிலிப்பைன்ஸ் (Philippines) நாட்டில் இருந்தபோது, இணையதளத்தில் (Internet) இருந்து எடுக்கப்பட்ட ஒரு பைபிள் பாடத்தைக் கண்டேன். அங்கே இருந்த சகோதரர்கள் அதை பயன்படுத்தி வந்தனர். மேலும் அப்பாடம் வாசிப்பதற்கு எளிமையாகவும், பைபிளின் அடிப்படையில் உள்ளதாயும் இருந்தது. அப்பாடத்தில், ஒருவர் கிறிஸ்தவர் மற்றும் ஆண்டவருடைய திருச்சபையில் அங்கமாவதற்குத் தேவையான அத்தியாவசியமான எல்லாம் கூறப்பட்டிருந்தது. மேலும் அப்பாடத்திட்டம் நிறைய பக்கங்களில் இல்லாமல், சுருக்கமாகவும் இருந்தது. அதனால், இந்தியாவில் உள்ள நம்முடைய மற்ற பைபிள் பாடங்களுடன் அதையும் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தேன்.

ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனி தாள்களில் அச்சிடுவதற்கு பதிலாக, நாங்கள் இந்த 8 பாடங்களையும் ஒன்று சேர்த்து, ஒரு புத்தக வடிவில் அச்சிட்டுள்ளோம். **ஒவ்வொரு பாடத்தின் கேள்விப்பகுதியானது, நீங்கள் பாடத்தை படித்து முடித்த பின், கேள்விப்பகுதியை மட்டும் நிரப்பி, கிழித்து அனுப்பும் வழியில் உள்ளது.** இப்படிச் செய்தால் இறுதியில் உங்களின் எதிர்கால பயன்பாட்டிற்கு உங்களிடம் புத்தகம் முழுமையாக இருக்கும்.

ஒவ்வொரு பாடத்தையும் படித்தபின், அதற்கான கேள்விப் பகுதியை நிரப்புங்கள். இப்படி 8 பாடங்களையும் படித்து கேள்விகளை நிரப்பியபின், **மொத்தமாக எங்களுக்கு பதில் தாளை மட்டும் அனுப்பி வையுங்கள்.** இந்த முறையை நீங்கள் பின்பற்றினால், உண்மையிலேயே நீங்கள் இப்பயிற்சியினால் நல்ல பலன் பெறுவீர்கள்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, அல்லது நீங்கள் வேறு ஏதேனும் திருமறைப்பாடத் திட்டத்தை படிக்க விரும்பினாலோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் இந்த திருமறைப்பாடப் பயிற்சியை படிப்பதினால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அதே நேரம், உங்கள் நண்பர், உறவினர்களையும் இப்பாடங்களை படிக்கும்படி நீங்கள் உற்சாகப்படுத்தும்படி உங்களை அழைக்கின்றோம்.

நன்றி

**J.C. Choate** (1932 - 2008)

**(World Evangelism)**

## முதலில் இதை கவனமாக படியுங்கள்

**குறிப்பு : விண்ணப்பப் படிவத்தை முதலில் நிரப்பி, உடனே அனுப்பவும்.**

*கல்லூரியிலிருந்து.....*

அன்பு மாணவரே! உங்கள் வாழ்வையே மாற்றி ஆசீர்வாதம் பெற்றுத்தரவுள்ள இந்த பாடங்களைப் படிக்க தேர்வும், தீர்மானமும் எடுத்த உங்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

**உடனே விண்ணப்பப்படிவத்தை நிரப்புங்கள்.** அதை முதலில் அனுப்பிவிடுங்கள். பிறகு பாடங்களைப் படித்தபின் கேள்வித்தாளை நிரப்பி, **கேள்விப் பதில் பகுதியை மட்டும்** அனுப்பி வையுங்கள். இப்பாடங்களை உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

வேறுபாடங்களும் எங்களிடம் உண்டு! கேட்டு எழுதுங்கள், அனுப்புகிறோம் ! ஆயிரக்கணக்கானோர் இப்பாடங்களில் சேர்ந்து பயின்றுள்ளனர். அதில் மருத்துவர்கள், பேராசிரியர்கள், வீட்டில் உள்ளோர், ஓய்வு பெற்றோர், தேவ ஊழியத்தில் முழுநேரமோ, பகுதி நேரமோ உள்ளவர்களும் அடங்கும். எனவே இந்த பாடங்களை சிறிது கரிசனையுடன் படித்து, உங்கள் ஆத்துமா மாட்சிமை பெற, வாழ்வு மங்களமடைய திட்டமிட்டு படியுங்கள்.

"இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; காலம் சமீபமாயிருக்கிறது". (வெளி 1:3)

**பதிவுக்கட்டணம் ரூ.100/- தாமதியாமல் அனுப்பவும்.** உங்களுக்கு, விருப்பமானால் இயலாத நிலையிலுள்ள பிறரும் இப்பாடங்களை படிக்க, அவர்களுக்கும் நீங்களே (ரூ. 100 பதிவு கட்டண தொகையை) அனுப்பி உதவலாம்.

எங்களிடம் **"கிருபையுள்ள வார்த்தை"** மாத இதழ் உண்டு. கேட்டு வாங்கிப்படியுங்கள். ஆங்கில இதழ் **"The Voice of Truth International"** English Quarterly Magazine உள்ளது. எழுதி பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்கள் முகவரிகளையும் எழுதி அனுப்புங்கள். இந்த முயற்சியிலே தேவனுடைய கிருபை உங்களுடன் இருப்பதாக!

நீங்கள் வீட்டிலோ, குழுவாக கூடி ஜெபிக்கும் இடத்திலோ, அல்லது சபைகளிலோ, வாலிபர் வகுப்புகளிலோ, மொத்தமாக இப்பாடங்களை வாங்கி படித்து பயன் பெறலாம். மொத்தமாக பெற விலைச்சலுகை உண்டு. இப்பாடங்கள் ஆங்கிலத்திலும் உள்ளது.

**இந்தப் பாடங்களை படித்து முடிக்கும் உங்களுக்கு, உங்கள் வாழ்வை ஆசீர்வாதமாக்கும் ஒரு பரிசு காத்திருக்கிறது.**

அன்புடன்

**பிலேமோன் ராஜா**

**(Director, CBCCI)**




# பைபிள்
## THE BIBLE

வேதாகமம் என்று அழைக்கப்படும் புத்தகம் எப்படிப்பட்டது? இது 40 வித்தியாசப்பட்ட ஆசிரியர்கள், சுமார் 1600 ஆண்டு கால இடைவெளியில் (கி.மு. 1500 – கி.பி. 100 வரை) எழுதின புத்தகங்களின் தொகுப்பாகும். இந்த ஆசிரியர்கள் மற்றவர்கள் கற்றுக் கொள்ளும்படி தங்கள் சுய ஞானத்தையோ, அறிவையோ வெளிப்படுத்தி இவற்றை எழுதவில்லை. அவர்கள் இவைகளை எழுதும்படியாக "கடவுளால் ஏவப்பட்டு" எழுதினர்.

*"தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்"* ***(2 பேதுரு 1:21)***

மற்றொரு வசனம் நமக்கு இப்படிச் சொல்கிறது. *"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும். எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"* ***(2 தீமோ. 3:16,17)***

இந்த வாக்கியங்களை மனிதர்கள் எழுதியிருந்தாலும், அந்த செய்தியின் பிறப்பிடம் தேவனே! மனிதகுலம் அறிந்திருக்க வேண்டிய சத்தியங்களை வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. வேதாகமத்தின் வசனங்கள் முக்கியத்துவம் உள்ளதால், நம் விருப்பத்திற்கேற்ப அவற்றையும், அவற்றின் அர்த்தத்தையும் மாற்றக்கூடாது என்று தேவன் எச்சரிப்புக் கொடுக்கின்றார்.

மோசே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாங்கிக் கொடுத்த தேவனுடைய கட்டளைகளின் ஒரு பகுதி இப்படியாகக் கூறுகின்றது, *"நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றுங் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்"* ***(உபா.4:2)***

பைபிள் எதைக் கற்றுக் கொடுக்கின்றது என்பதை சரியாக அறிய வேண்டியது அவசியம். இல்லையெனில், நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அவரை

பிரியப்படுத்த முடியாமல் போகும். அவரை நேசித்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களையே அவர் பாராட்டுவார்.

*"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:2)*

## எந்த தேவன் (கடவுள்)? Which God ?

இன்றைய உலகில் அநேக தேவர்கள் உள்ளன. "எந்தக் கடவுளைப் பற்றி பேசுகிறீர்கள்?" என்று நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். சுமார் 2000 வருடங்களுக்கு முன் அத்தேனே பட்டணத்திற்கு பவுல் வந்தபோது, இதேப் போல ஒரு கேள்வியைச் சந்தித்தார். அந்தப் பட்டணம் (விக்கிரக) சிலைவழிபாட்டால் நிறைந்திருந்தது *(அப்.17:16)*. அவர்களுக்கு பவுல் இயேசுவைப் பற்றி பிரசங்கித்தார் (நம்முடைய 2ம் பாடத்தின் மைய நபர் அவர்தான்). ஆனால் இந்தப் போதனை அந்த மக்களுக்கு விநோதமாய் இருந்தபடியால், நன்றாக விளக்கும்படி பவுலை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

*"அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவில் நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்து பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளினால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை" (அப். 17:22-25).*

வேதாகமத்துக் கடவுள் ஒரு சாதாரண பக்திமானோ, அநேக தேவர்களில் ஒருவரோ அல்ல. நீங்கள் பூமியிலும், வானத்திலும் பார்க்கிற அனைத்தையும் படைத்த சர்வலோகத்தின் கடவுள்தான் அவர். வேதாகமத்தின் முதல் வசனமே இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றது. *"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1).*

ஆதியாகமத்தின் இதே முதல் அதிகாரம், தேவன் பன்மையானவர் என்று வெளிப்படுத்துகிறது. இங்கே நாம் தேவஆவியைப் பற்றி மாத்திரம் அல்ல (ஆதி. *1:2*), *"நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக"* (*ஆதி. 1:26*) என்றும் எழுதப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். உண்மையில் தேவத்துவத்தை 3 பேர் பகிர்ந்து கொள்கின்றனர். *பிதா, வார்த்தை* (புதிய ஏற்பாட்டில் இயேசு), மற்றும் *பரிசுத்த ஆவியானவர்.* இவர்கள் மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (வெவ்வேறு நபர்கள்). "இஸ்ரவேலே, *கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே, கர்த்தர்" (உபா. 6:4).*

*தேவன் ஒரு மனிதனைப் போன்றவர் அல்ல* என்றும் பைபிள் சொல்கின்றது. நாம் சரீரத்தில் வெளிப்புறமாக, மாம்சமும் இரத்தமும் உடையவர்களாயிருக்கிறோம் (உள்ளே ஆவியுடையவர்கள்); ஆனால், "தேவன் *ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24)*

படைப்பு முதற்கொண்டு நாம் தேவனுடன் பல நிலைகளில் வேறுபட்டிருப்பதாக, இந்த சரீரத்தில் வாழும்போது அநேக நேரங்களில் புரிந்து கொள்ளுவதில்லை. ஆனால், அவர் வேதாகமத்தில் தன்னை வெளிப்படுத்தியிருப்பதின் மூலம் அவருடைய குணம் மற்றும் சித்தத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

## வேதாகமம் (பைபிள்)என்றால் என்ன? What is Bible ?

வேதாகமம் 2 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. *பழைய ஏற்பாடு* மற்றும் *புதிய ஏற்பாடு* வேதாகமத்தின் இரண்டு பெரும் பிரிவுகளாகும். வேதாகமத்தில் *39 பழைய ஏற்பாட்டு* நூல்களும், *27 புதிய ஏற்பாட்டு* நூல்களும் ஆகிய, மொத்தம் *66 புத்தகங்கள்* உள்ளன.

பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் *கி.மு. 1500-கி.மு. 400*க்குள் எழுதப்பட்டன. மேலும் அவை *5 பெரும் பிரிவுகளாக* பிரிக்கப்பட்டுள்ளன. *முதல் பகுதியானது* மோசேயினால் எழுதப்பட்ட 5 புத்தகங்களை உள்ளடக்கியது. அது, *சட்டம்* என்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதியின் முதல் புத்தகமான *ஆதியாகமம்*, இந்த உலகத்தின் படைப்பைப் பற்றிக் கூறுகின்றது. மேலும் அது, மனிதனுடைய வாழ்வில் சுமார் 2000ஆண்டு வரலாற்றையும், எட்டுபேர் தவிர மற்ற உலகத்தார் அனைவரும் வெள்ளத்தால் அழிக்கப்பட்டதையும் சேர்த்து கூறுகின்றது.

வெள்ளத்திற்கு பின், மனிதன் மீண்டும் தேவனோடு போராடினான். ஆதலால் அவர் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக, ஆபிரகாம் என்னும் மனிதனைத் தெரிந்து கொண்டார். அவனுடைய சந்ததி (இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்ட மக்கள்) தேவனுடைய சிறப்பான ஜனங்களாயினர். மோசேயின் மூலமாக தேவன் தன்னுடைய பரிசுத்த கட்டளைகளை இந்த ஜனங்களுக்குக் கொடுத்தார். மேலும் அவர்கள், இயேசு இந்த உலகத்தில் பிறக்கப் போகும் தேசத்தாராய் இருக்கும் பாக்கியம் பெற்றனர்.

இந்த இயேசுதான் நம்முடைய பாவங்களுக்கான விலையைக் கொடுக்க வந்தவர். ஏனெனில், நாம் எல்லாரும் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறும்படி அவர் அப்படிச் செய்தார்.

ஆதியாகமப் புத்தகத்தின் இறுதிப் பகுதியில், தேவனுடைய ஜனங்களான இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருப்பதாகக் காண்கிறோம். யாத்திராகம புத்தகத்தில் இந்த இஸ்ரவேல் ஜனங்கள், அடிமைகளாக்கப்பட்டதாக காண்கிறோம். தேவன், அவர்களை விடுவிக்கும்படி மோசேயை அனுப்புகிறார். பின்பு தேவன் அவர்களுக்கு தனது சட்டத்தையும், தன்னை ஆராதிக்க வேண்டிய வழியையும் கொடுக்கிறார் (லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம்).

அதை தொடரும், *இரண்டாம் பகுதியானது*, பழைய ஏற்பாட்டின் *12 புத்தகங்கள் (யோசுவா முதல் எஸ்தர் வரை), இஸ்ரவேலரின்* அடுத்த 1000ஆண்டு *வரலாற்றை கூறுகின்றது*. மூன்றாம் பகுதியில் அடங்கும் *யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு* ஆகியவை "*ஞான இலக்கியங்கள்*" என்று அழைக்கப்படுகின்றது. இவை *பாடல்கள்*, நாடகங்கள் மற்றும் நீதிமொழிகளை உள்ளடக்கிய கவிதை வடிவிலான புத்தகங்கள். கடைசி 17 (5+12) புத்தகங்களும் (நான்கு ஐந்தாம்) பகுதிகள் இந்த 1000 ஆண்டுகளும் வாழ்ந்து, போதித்த *தீர்க்கதரிசிகளால்* எழுதப்பட்டவை. இது *பெரிய, சிறிய தீர்க்கதரிசனங்கள்* ஆகும்.

*புதிய ஏற்பாடு*, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க வந்த இயேசு கிறிஸ்துவின் மேல் கவனம் செலுத்துகிறது. *மத்தேயு, மாற்கு, லூக்கா* மற்றும் *யோவான்* ஆகிய புத்தகங்கள் இயேசுவின் பூமிக்குரிய வாழ்வைப் பற்றி கூறுகின்றன.

இந்த 4 புத்தகங்களும், இயேசு கன்னியினிடத்தில் பிறந்தது, அவருடைய போதனைகள், *நம்முடைய பாவங்களுக்காக அவர் சிலுவையில் மரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது, மற்றும் மரித்தோரிலிருந்து 3ம் நாள் உயிர்த்தெழுந்தது* ஆகியவற்றைக் கூறுகின்றது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டுக் கொண்டார் என்று, மனிதனுக்கு போதிக்கப்பட்ட நற்செய்தியுடன் *அப்போஸ்தலர் நடபடிகள்* புத்தகம் ஆரம்பிக்கிறது. 'பாவ மன்னிப்புக் கிடைக்கின்றது; இதற்கு மேல், தேவன் இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவரையும் இயேசுவைத் தலையாகக் கொண்ட, விசுவாசிகளை சரீரமாகக் கொண்ட திருச்சபையில் வைக்கின்றார் என்ற செய்தியையும் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் கொண்டுள்ளது. *ரோமர் முதல் யூதா வரை,* நாம் எவ்வாறு தேவனை சேவித்து அவரை ஆராதிக்க வேண்டும் என்பதைக் குறித்தும், கிறிஸ்தவ வாழ்க்கையை குறித்தும் கூறுகின்றன.

*வெளிப்படுத்தின விசேஷம்* ஒரு தீர்க்கதரிசன புத்தகம் ; இந்த வாழ்வில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளின் மத்தியிலும், தேவன் அவருடைய விசுவாசமுள்ள பிள்ளைகளுக்காக அக்கறை கொண்டு, அவர்களுக்கு, உரிய பரிசு கொடுக்கிறார் என்றும் இப்புத்தகம் கூறுகிறது.

புதிய ஏற்பாடு புத்தகங்கள் அனைத்தும் *கி.பி. 40 - கி.பி 100ல்* எழுதப்பட்டன.

## வேதாகமம் - சிந்தனைத் துளிகள்

✤ **வேதாகமம்** தேவனுடைய மனதை, மனிதனுடைய நிலையை, இரட்சிப்பின் வழியை, பாவிகளின் பரிதாப நிலையை மற்றும் விசுவாசிகளின் சந்தோஷத்தை தனக்குள் கொண்டுள்ளது.

✤ **வேதாகமத்தின்** உபதேசங்கள் பரிசுத்தமானதாயும், நல்லொழுக்க விதிகள் இசைவாயும், வரலாறு உண்மையுள்ளதாயும், முடிவுகள் மாறாதவைகளாகவும் இருக்கின்றன.

✤ ஞானமுள்ளவர்களாக அதை வாசியுங்கள். பாதுகாப்பாக இருக்க அதை நம்புங்கள். பரிசுத்தமாக இருக்க அதை பயிற்சி செய்யுங்கள்.

✤ உங்களை வழிநடத்த வெளிச்சமும், உங்களுக்கு உறுதி கொடுக்க சத்தான உணவும், மகிழ்விக்க ஆறுதலும் **வேதாகமத்தில்** உள்ளன.

✤ **வேதாகமம்** - பயணம் செய்பவர்க்கு வரை படமாகவும், யாத்திரிகர்க்கு கோலாகவும், விமானம் மற்றும் கப்பல் ஓட்டிக்கு திசைக்காட்டியாகவும், படைவீரனுக்கு வாளாகவும், கிறிஸ்தவனுக்கு குணம் காட்டியாகவும் இருக்கிறது.

✤ இதில் பரலோகம் திறக்கப்பட்டு, நரகத்தின் வாசல்கள் மூடப்படுகின்றன. கிறிஸ்து இயேசுவே இதனுடைய சிறப்புப் பொருள். நம்முடைய நன்மைகள்தான் இதன் வடிவமைப்பு, மற்றும் தேவனுடைய மகிமையே இதன் முடிவு.

✤ இந்த **வேதாகமம்** நம்முடைய நினைவை நிரப்பி, இருதயத்தை ஆண்டு கொண்டு, பாதங்களை வழிநடத்த வேண்டும்.

✤ **வேதாகமத்தை** மெதுவாக, அடிக்கடி மற்றும் ஜெபத்துடன் படியுங்கள்.

✤ **வேதாகமம்** ஒரு செல்வச் சுரங்கம், ஆத்துமாவிற்கு ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியின் ஆறு.

✤ இந்த வாழ்க்கையில் **வேதாகமம்** நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது. நியாயத்தீர்ப்பின்போது திறக்கப்படும் மற்றும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

✤ **வேதாகமம்** உயரிய பொறுப்பை உள்ளடக்கியது. விசுவாசமுள்ள வேலையாளுக்கு பரிசை வாரிக் கொடுக்கிறது மற்றும் இதனுடைய பரிசுத்த வார்த்தைகளை மீறுபவர்களை கடிந்து கொள்கிறது.

எங்களிடம் புதிய ஏற்பாடு இலவசமாக் கிடைக்கும். தபால் செலவு மட்டும் அனுப்பி பெற்றுக் கொள்ளவும். விபரம் அறிய : 92 4421 4421

# இயேசு கடவுளுடைய தெய்வீகக் குமாரன்

## JESUS - THE DIVINE SON OF GOD

*"இந்த புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தனது சீஷருக்கு முன்பாக செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" **(யோ. 20:30,31)**.*

முதல் மனிதனாகிய ஆதாமையும் முதல் மனுஷியாகிய ஏவாளையும் தமது சாயலில் படைத்து, ஒரு அருமையான உலகமாகிய ஏதேன் தோட்டத்திலே தேவன் வைத்தார் வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்திலே என்று வாசிக்கின்றோம். தேவன், அவர்கள் கடைபிடிக்கும்படியாக கட்டளைகளைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் அதை மீறினார்கள். தேவனுடைய கட்டளையை மீறுவதே பாவம். *ஆதாமையும், ஏவாளையும் போலவே நாமும் கடவுளுடைய கட்டளைகளை மீறி பாவம் செய்தோம்.*

*"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ. 6:23).* இந்த மரணம், மனிதர்கள் அடையக்கூடிய சரீர மரணம் (உடலில் இருந்து ஆவி பிரிவது) அல்ல. மாறாக, இந்த மரணம் தேவனை விட்டு நித்தியமாய் பிரிந்து போவதாகும். *2தெச.1:7,8 வசனங்களில் நாம், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்"* என்று இயேசுவைக் குறித்து வாசிக்கின்றோம்.

நித்திய தண்டனைக்கு தப்பிக்கொள்ள, நாம் தேவனைப் பற்றித் தெரிந்து கொண்டு, சுவிசேஷத்திற்கு எப்படி கீழ்படிவதென்று அறிந்து கொள்ள வேண்டும். தேவன் யார்? என்பதையும், எப்படி நாம் இரட்சிக்கப்பட வேண்டும்? என்பதையும், பைபிள் நமக்கு வெளிப்படுத்துகிறது. மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து விடுவிக்கும்படியான தேவதிட்டம், முதலில் ஏதேன் தோட்டத்தில் காணப்படுகிறது. மனிதனுடைய பாவத்திற்கான தண்டனையைக் குறித்து அங்கே அவர் சொன்ன மாத்திரத்திலேயே, அவனை பாவத்திலிருந்து விடுவிக்கும்படியான வாக்கையும் கொடுத்தார். *(ஆதி. 3:15).*

பின்பு தேவன், ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியையும், அவருக்குச் சொந்தமான சிறப்பான மக்களாக தெரிந்து கொண்டபோது, *"உன்னுடைய சந்ததியின் மூலம் பூமியிலுள்ள சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும்"* ***(ஆதி. 26:5 மற்றும் 28:14)*** என்று கூறினார். ஆண்டவர் இயேசுவே சகல தேசங்களையும் ஆசீர்வதிக்கும் வித்து ***(கலா. 3:16).*** ஆபிரகாமின் சந்ததியின் மூலம் (பழைய ஏற்பாட்டின்படி) வருபவர் இயேசுவே! புதிய ஏற்பாட்டின் பொருள் இதுவே.

## ஆண்டவர் இயேசு தனித்தன்மை உடையவர்:

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு பிறந்தார். முழுக்க மனிதனாகவும், தெய்வீகத்துடனும் வாழ்ந்த ஒரே மனிதர் இயேசுவே. இது புரிந்துக்கொள்வதற்கு கடினமாக இருக்கலாம்; ஆனால் வசனம் இவ்வாறு சொல்கிறது, *"ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது"* ***(யோ. 1:1).***

*"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"* ***(யோ. 1:14).***

மாம்சப்பிரகாரமாக, இயேசு ஆபிரகாமின் சந்ததியில் வந்தார். அவர் தேவத்துவத்தின் ஒரு அங்கமும் கூட. தேவன் (நம்மைப் போல) மனிதனானார்.

ஏனென்றால், *"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது"* ***(கொலோ. 2:9).***

இயேசுவுக்கு, ஒரு சரீர பெற்றோரும் மற்றும் ஒரு தெய்வீகப் பெற்றோரும் இருந்தனர். இயேசுவுக்கு தாயாகப் போகும் ஒரு கன்னிகையைப் பார்த்து தூதன் கூறியது, *"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் ; நீ அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக"*, ***(லூக் 1:31)***என்பதாகும்.

*"அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: 'இது எப்படியாகும்? புருஷனை அறியேனே' என்றாள். தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக, 'பரிசுத்த ஆவி உன்மேல் வரும் ; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் ; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ளது. தேவனுடைய குமாரன் எனப்படும்"* ***(லூக். 1:34,35)***

மேலும், இயேசு, *பாதி மனிதனாகவும், பாதி தெய்வீக தன்மை உடையவராகவும் இருக்கவில்லை.* அவரே, தன்னுடைய தேவத்துவத்தைப்

பற்றி சில நேரங்களில், "தேவகுமாரன்" என்று கூறியுள்ளார். வேத புத்தகத்தில் "உடைய குமாரன்" என்றால், பெற்றோரின் குணத்தை முழுமையாக வெளிப்படுத்தக்கூடியது என்று பொருள். ஆனபடியால், அவர் முழுமையாக மனிதனாகவும், முழுமையாக தெய்வீக சுபாவத்துடனும் இருந்தார். தான் மனிதனாக வாழ்ந்து, என்ன ஒரு தாழ்மையை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்!

*"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனிதரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:5-8).*

## ஆண்டவராகிய இயேசு நித்தியமானவர்:

ஒரு சமயத்தில் இயேசு யூதர்களைப் பார்த்து, *"ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன்"* என்று சொன்னார் *(யோ. 8:58)*. இயேசு இந்த உலகில் பிறக்கும்முன், சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னமே ஆபிரகாம் இந்த உலகில் வாழ்ந்திருந்தாலும், இயேசுவின் உண்மையான இருப்பு அதற்கும் பல ஆண்டுகட்கு முன் செல்கிறது. *"நான் இருக்கிறேன்"* என்று அவர் சொல்லும் வார்த்தை, *அவர் நித்தியமானவர்* என்பதை உணர்த்துகிறது. பிதாவினால் இயேசு இந்த உலகத்துக்கு அனுப்பப்பட்டார், *(யோ. 5:23)*. அவர் பரலோகில் இருந்து வந்தவர் *(யோ. 6:38)*. பின்பு அவர் மறுபடியும் அங்கே சென்றார் *(யோ. 13:13)*. தான் தேவனுடன் சமமாக இருக்கிறார் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார் *(யோ.5:17,18)*. அதனாலேயே யூதர்கள் அவரை கொலை செய்ய விரும்பினார்கள்.

## இரட்சகராகிய இயேசு:

'இயேசு' என்ற பெயருக்கு 'இரட்சகர்' (மீட்பர், விடுதலை தருபவர்) என்று அர்த்தம். அவருக்கு இயேசு என்று பெயரிடும்படியாக, அவருடைய தாயாகிய மரியாளுக்கு அறிவுறுத்தப்பட்டது *(லூக். 1:31)*. ஏன்? *மத். 1:21*ன் படி *"..... ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார்"* என்று சொல்லுகிறது.

இந்த ஒரே காரணத்திற்காகத்தான், இயேசு பரலோகத்தைவிட்டு இந்த பூமிக்கு வந்தார்.

ஆனால் அவர், பார்வைக்கு மற்ற மனிதர்களைப் போல் சாதாரணமானவராக இருந்ததால், தான் ஜனங்களை இரட்சிக்கக்கூடிய தேவனுடைய குமாரனாகிய இயேசு என்று விளக்க வேண்டியிருந்தது. அவர் தன்னுடைய தன்மையை, தான் செய்த அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும், அதிசயங்களினாலும் நிரூபித்தார். (இப்பாடத்தின் துவக்கத்திலுள்ள அந்த பத்தியைப் படியுங்கள்).

38 வருடங்களாக நடக்க முடியாமல் இருந்த ஒரு மனிதனை இயேசு குணமாக்கினார் *(யோ. 5:5-9)*. மேலும் 5 அப்பங்களையும், 2 மீன்களையும் வைத்து 5000 மக்களுக்கு உணவளித்தார் *(யோ. 6:9-14)*. அவர் பிறவியிலேயே குருடனாய் பிறந்த ஒரு மனிதனைப் பார்வையடையச் செய்தார் *(யோ. 9:1-7)*. அவர் மரித்த லாசருவை உயிரோடு எழும்பச் செய்தார் *(யோ.11:38-44)*; மேலும் இயேசு செய்த அற்புதங்களில் இவை ஒரு சிலதான். இந்த அற்புத அடையாளங்களின் விளைவுகள், வேதாகமத்தின் பல வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

*"அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோ. 2:23)*

*"அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப்பின் சென்றார்கள்". (யோ. 6:2)*

*"..........ரபீ. நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால், நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்" (யோ. 3:2)*

மரித்த லாசருவை இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினபோது, அநேக யூதர்கள் அவர்மேல் நம்பிக்கை வைத்தனர்; மாறாக, பிரதான ஆசாரியர்களோ, அவர்மீது பொறாமைக் கொண்டு அவரை கொலை செய்ய தீர்மானித்தனர் *(யோ.12:9-10)*. அதைத்தான் அவர்கள் செய்தும் முடித்தனர். உலகத் தோற்றமுதலே தேவனுடைய திட்டம், இயேசுவை முழு உலகினுடைய பாவத்திற்கும் பலியாக ஒரு சிலுவையின் மேல் மரிக்க அனுமதிப்பது என்பதே! அவர் பாவமற்றவராய் இருந்ததால், நாம் அடைய வேண்டிய நிலையை அவர் அடையும்படி தகுதி பெற்றார். ஆனால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இந்த உண்மைகளையெல்லாம், அப்போஸ்தலனாகிய பேதுரு, பெந்தேகொஸ்தே நாளின் தன் முதல் பிரசங்கத்தில் கூறினார்.

*"இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்: நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே தன்னை அவர், உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவிப்பின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை, நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்". (அப். 2:22,23).*

*"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப். 2:32).*

*"ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான்" (அப். 2:36).*

நம்முடைய பாவங்களுக்காக, அவருடைய பாவமற்ற இரத்தம் சிந்தப்படும்படி இயேசு, பாவமுள்ள மனிதர்கள் தன்னை சிலுவையில் அறைய அனுமதிகொடுத்தார். நாம் எவ்வாறு பாவங்களிலிருந்து மன்னிப்படைய முடியும் என்பது, அடுத்து வரும் பாடங்களின் பொருளாகும்.



2

# பாவம் என்னும் பிரச்சனை

## THE PROBLEM OF SIN

"இது தவறு" என்று தெரிந்த ஒன்றை நீங்கள் எப்பொழுதாவது செய்ய தெரிந்தெடுத்ததுண்டா? அப்படிப்பட்ட தவறான காரியங்களை வேதாகமம் "*பாவம்*" என்று சொல்கிறது. பொதுவான நோக்கத்திலே தேவன் நமக்கு ஒரு கட்டளையைக் கொடுத்து, அதை நாம் செய்ய மறுக்கும்போது, அது நம்மை "*சட்டத்தை மீறுகிறவர்களாக*" அல்லது சட்டமில்லாதவர்களாக மாற்றுகிறது.

''*பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1யோ 3:4)*. மற்றொரு விதத்தில் சொல்லப்போனால், வேதாகமம் சிலவற்றைப் பாவம் என்று சொல்லுகிறது. உதாரணமாக, திருடுவது என்பது பாவம். திருடர்கள் அநீதிக்காரர்களில் ஒருவராக கருதப்படுவார்கள் *(1கொரி. 6:9,10)*. மேலும் அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை "*திருடுகிறவன் இனித் திருடாமல்....*" *(எபே. 4:28)*. திருடுவது ஒரு தவறு; நாம் திருடுவோமானால், நாம் தேவனுடைய கட்டளையை உடைக்கின்றோம்; ஆகையால் *பாவம் செய்கின்றோம்* என்பதாகும்.

உண்மையை மறுப்பதும் பாவம்தான். ஏனென்றால், வேதாகமம் உண்மையாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் ஒரு புத்தகமாகிய ரோமரில், பாவத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. மனிதன் எப்பொழுதுமே உண்மையை அறிந்ததில்லை என்று கூற முடியாது. ஏனென்றால், அவன் அதை விட்டு திரும்பி, அதை புறக்கணித்துவிட்டான் *(ரோ. 1:18-20)*. கீழே உள்ள சில வசனங்கள், எவ்வாறு மனிதகுலம், தேவனையும், அவருடைய வார்த்தையையும் பார்க்கிறது என்று கூறுகின்றன. "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது, அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.

*"தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்; அவரே (தேவன்) என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென்" (ரோமர். 1:21-25).*

எல்லா மனிதர்களும் சத்தியத்தை அறிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதனால்தான் தேவன் பரிசுத்த வேதாகமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் அதை மறுதலித்தால் தேவன் நம்மை மூடராகும்படி விட்டுவிடுவார். தவறான காரியங்கள் நம்மை குருடாக்கும்படியும், நாம் நித்தியமாய் அழிந்துபோகும்படியும் விட்டுவிடுவார் *(2 கொரி. 4:3,4).* நாம் வேதாகமத்தை வெறுத்தால், தவறான போதனைகளால் ஏமாற்றப்படும்படியாக அனுமதிப்பார். அநேகர் அதன் காரணமாக அழிந்து போயிருக்கிறார்கள்; *"சத்தியத்தின் மீதுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்" (2 தெச. 2:10).*

எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் சத்தியத்தை நேசிக்கிறீர்களா? ஆபிரகாமையும், அவன் சந்ததியையும் தேவன் தன் சொந்த ஜனமாக தெரிந்து கொண்டபொழுது, இந்த உலகத்தில் இரண்டு கூட்டத்தார் உருவாகினார்கள். ஒன்று *ஆபிரகாமின் சந்ததியார்* - இவர்கள் பின்பு யூதர்கள் என்று அழைக்கப்பட்டனர். மற்றொன்று, *புறஜாதியார்* - மற்ற தேசத்தின் அனைத்து மக்களும் இப்படியாக அழைக்கப்பட்டனர். ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் யூதர்களும், புறஜாதியாரும் ஆகிய இருவருமே பாவத்திற்குட்பட்டவர்கள் என்று கூறினார். புறஜாதியார் சத்தியத்தைப் புறக்கணித்து, சிலைவழிபாட்டு ஆராதனைக்காரர்களாக இருந்தனர். யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அதை அவர்கள் கைக்கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் பாவஞ்செய்தார்கள் (யூதரானாலும், புறஜாதிகளானாலும்). *"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை". (ரோ 3 :10), "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி " (ரோ. 3:23)*

நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்களா? ஆம்! மேலே கூறப்பட்டுள்ள வசனங்கள் நாம் ஒவ்வொருவரும் பாவம் செய்துள்ளோம் என இதைத் தெளிவாக கூறுகிறது.

ஆனால் நீங்கள் ஆச்சரியப்படலாம். எத்தனைத் தரப்பட்ட பாவங்கள் உள்ளன. சில பாவங்களின் பட்டியல் கீழேயுள்ள வசனங்களில் காணப்படுகிறது. *ரோம. 1:29-32; 1 கொரி.5:11; 6:9,10 ; கலா. 5:19-21; எபே. 4:26-32; 2தீமோ. 3:1-5; மேலும் வெளி. 21:8ல்* சில பாவத்தின் பட்டியல் தரப்பட்டுள்ளன.

மாம்சத்தின் பாவங்கள் உண்டு. மாம்ச இச்சைகளை சட்ட விரோதமாக தீர்த்துக் கொள்வதை இது குறிக்கிறது. பாலியல் ஒழுக்கக்கேடு (அதாவது சொந்த கணவன், மனைவியைத் தவிர வேறொருவரோடு பாலியல் உறவு கொள்ளுதல்), விபச்சாரம், சுயபுணர்ச்சி, வேதம் அங்கீகரிக்காத விவாகரத்து மற்றும் மறுமணம், குடிபழக்கம் ஆகியவையே. மேலும் தேவன் நம்மை, பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

*"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறது". (1பேதுரு 1:15-16)*

*"பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி" (1 பேதுரு 2:11)*, என்று பேதுரு கெஞ்சுகிறார்.

"சிந்தையினாலான பாவங்கள்" உண்டு. பெருமை, பொறாமை, பொருள் இச்சை, கோபம், வெறுப்பு, பிறர்க்கு தவறு செய்தல், நன்றியறியாமை, மன்னிக்காத தன்மை போன்றவை. சிலவகை நாவினால் வெளிப்படுத்தப்படுகிறது. இவைகளை நாம் கட்டுப்படுத்தும்படியாக எச்சரிக்கப்படுகிறோம்.

*"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரி. 7:1).*

நாம் தவறான காரியங்களை செய்யாது இருந்தால் மட்டும் போதாது, மாறாக நன்மையான காரியங்களை செய்தாக வேண்டும்.

*"ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமல் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக். 4:17).*

## பாவத்தின் சம்பளம் :

நாம் பாவம் செய்ய தீர்மானிக்கும்பொழுது என்ன நடக்கிறது? நாம் தேவனுடன் கொண்டிருக்கின்ற ஐக்கியத்தை இழந்து போகின்றோம். துவக்கத்தில் ஆதாம் மற்றும் ஏவாள், தங்கள் பாவத்தின் நிமித்தம் தேவனுடன் கொண்டிருந்த தனிப்பட்ட உறவை இழந்தார்கள் (ஆதி. 3). இஸ்ரவேலரின் பாவத்தைக் குறித்து ஏசாயா

தீர்க்கதரிசி, *"இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா. 59:1-2)* என்று கூறுகிறார்.

தேவன் பரிசுத்தராக இருக்கிறபடியால், அவர் பாவத்தை அங்கீகரிக்கவோ அல்லது அதனுடன் ஐக்கியப்படவோ முடியாது; பதிலாக, பாவத்தை தண்டிக்கக்கூடியவராக இருக்கிறார். *"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ. 6:23).*

பாவக் குற்றத்தை சுமந்து கொண்டு மரிப்போமாகில், என்னவாகும்? நாம் அழிந்துபோய் விடுவோம். இயேசுகிறிஸ்து வரும் ஒரு நாள் இருக்கிறது. *"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்." (2 தெச. 1:7-8)* என்பதாகும்.

நம்மில் ஒவ்வொருவரும் பாவம் செய்திருக்கிறோம். நாம் அனைவரும் தேவனுடைய ஐக்கியத்தை இழந்துள்ளோம். நாம் மரணத்திற்கும், ஆவிக்குரிய மரணத்திற்கும், தேவனிடத்திலிருந்தும் மற்ற எல்லா ஆசீர்வாதங்களிலிருந்தும் நித்திய பிரிவிற்குமே தகுதியுள்ளவர்கள். நாம் சதா காலமும் துன்பப்பட விரும்பவில்லை; ஆனாலும், அதற்கே தகுதியாய் இருக்கின்றோம்.

நாம் வேதனைப்படுத்திய பரிசுத்த தேவனோ, நாம் நித்தியமாய் அழிந்துபோவதை விரும்பவில்லை. ஆனால், அவர் பரிசுத்தராக இருப்பதினால், அவர் நம் பாவத்திற்காக நம்மை தண்டிக்க வேண்டும். மாறாக, நம் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க தேவன் ஒரு வழியை தீர்மானித்தார். அதுதான் இயேசு கிறிஸ்து நம் இடத்தை எடுத்துக் கொண்டு, நமக்காக நம்முடைய தண்டனையை சுமந்தார் என்பதாகும்.

*"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*

*அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து,*

*அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்" (ஏசா. 53:5,12)* என்று இயேசுவின் பலியைக் குறித்து வேதாகமம் கூறுகிறது. அநீதி மற்றும் மீறுதல்களுக்கும் அர்த்தம் பாவமாகும்.

*"பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோ. 6:23).* இயேசுகிறிஸ்து தேவத்துவத்தின் ஒரு அங்கமாயிருப்பதினால், *ரோமர் 3:26ம்* வசனத்தில் பவுல் சொன்னதை நாம் புரிந்து கொள்ளமுடியும். மேலும், தேவன் நீதியுள்ளவரென்றும், இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களுக்கு நீதி செய்கின்றவர் என்றும் சொல்லுகிறார். *2 தெச.1:7-9ஐ* மீண்டும் வாசியுங்கள். தேவனை உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்துள்ளீர்களா? இல்லையென்றால், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலே காணாமற்போயுள்ளீர்கள். அடுத்த பாடத்தில், இயேசுவின் மூலம் எவ்வாறு இரட்சிக்கப்பட வேண்டும் என்பதையும் படிக்கலாம்.

# பாவத்திலிருந்து இரட்சிப்பு

## SALVATION FROM SIN

நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் *(ரோமர் 3:23)*, மற்றும் மரணத்திற்கு நாம் எல்லாரும் பாத்திரவான்களாய் இருக்கிறோம். தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் *(ரோ. 6:23)*. எல்லா தேசத்திலும் உள்ள மனிதருக்கும் இரட்சிப்பை வழங்க தேவன் முற்றிலும் கிருபை பொருந்தினவராய் இருக்கிறார்.

*"ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்கதாக தேவ கிருபையானது பிரசன்னமாகி" (தீத்து 2:11)* என்று வேதாகமம் கூறுகின்றது. நாம் பாவம் நிறைந்தவர்களாகவும், எதிர்க்கிறவர்களாகவும் இருந்தபோதும், நாம் இரட்சிக்கப்படுவதற்கான வழியைக் காண்பித்து தேவன் தன்னுடைய அன்பின் ஆழத்தை விளங்கப் பண்ணினார். *"நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோ 5:8)*.

எவ்வாறு தேவன் நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கிறார்? நமது பாவத்திற்கான தண்டனைத் தொகையை, இயேசு செலுத்தும்படி அனுமதித்ததின் மூலமாக அவர் நம்மை இரட்சிக்கிறார். நாம் எல்லாரும் பாவத்தினால் ஏற்படும் குற்றமனப்பான்மையோடு இருப்பதால், நாம் ஒருவருக்கொருவர் எதுவும் செய்ய இயலாது. பாவம் இல்லாத ஒருவரால் மாத்திரமே நமது தண்டனையை ஏற்றுக் கொள்ள முடியும். இயேசு *"பாவஞ்செய்யவில்லை", "அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவும் இல்லை." (1 பேதுரு 2:22)*. ஆகையால் நமக்கு பதிலாக தண்டனை அனுபவிக்க அவர் தகுதியானார். நம்மை இரட்சிக்க தேவனுக்குத் தேவைப்பட்ட விலை, ஒன்றும் அறியாத பலியின் இரத்தமாகும். *"இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22)*. இயேசு கிறிஸ்துவிடம் பாவம் இல்லாதிருந்தும், வஞ்சகமான பாவிகளால் மரச்சிலுவையில் அறையப்பட்டார். அவர் பயங்கர வலிகளை வெகுநேரம் அனுபவித்தார். அவர் மரித்ததற்கு பின், போர்ச்சேவகர்களில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது *(யோ 19:34)*. இந்த இரத்தத்தினாலே இயேசு நமது பாவங்களைக் கழுவுகிறார் *(வெளி 1:5)*.

இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றினாலும் நமது பாவங்களை கழுவவோ, நீக்கவோ இயலாது.

நமது பாவங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படவில்லை என்றால், தேவனிடமிருந்தும் அவருடைய எல்லா நன்மையிலிருந்தும் எப்பொழுதும் பிரிக்கப்பட்டு, நாம் எல்லாரும் தண்டிக்கப்பட்டிருப்போம் *(2தெச.1:10)*. இயேசு கிறிஸ்து தேவனை விட்டுப் பிரிந்ததின் மூலம், ஆவிக்குரிய மரணத்தை ஒவ்வொரு மனிதனுக்காகவும் சிலுவையில் ருசிபார்த்தார் *(எபி 2:9)*. *"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத் 27:46)*

நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, பின் தன்னுடைய இரத்தத்தினால் நம்முடைய எடுத்து, பாவங்களை எல்லாவற்றையும் கழுவினார். இதைக்காட்டிலும் இயேசுவால் இன்னும் எவ்வளவு அன்பு காட்ட இயலும். ஆனால், "எவ்வாறு நாம் எவ்வாறு நித்தியஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் கூடும்?" என்ற கேள்வி இன்னும் நம்மில் இருக்கிறது.

## இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு:

இரட்சிப்பு தேவனுடைய கிருபையால் எல்லாருக்கும் அளிக்கப்பட்டாலும், மனிதன் செய்ய வேண்டிய செயலும் அதில் இருக்கிறது. இல்லையென்றால், அவர்கள் என்ன செய்கின்றனர்? என்ன சிந்திக்கின்றனர்? என்று எதுவும் இல்லாமல், எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட்டிருப்பார்களே!

இயேசு எல்லாருடைய பாவங்களுக்காகவும், உலகில் உள்ள எல்லாருடைய எல்லா பாவங்களுக்காவும் மரித்தார் *(1யோ. 2:1)*. ஆனால் எல்லா மக்களும் இரட்சிக்கப்படமாட்டார்கள்; ஏனென்றால், அநேகர் தேவனுடைய ஈவை பெறுவதற்கான முறைகளை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இரட்சிப்பை நாம் பெற, கீழே சொல்லப்பட்டுள்ள, தேவன் எதிர்பார்க்கும் காரியங்களை நிறைவேற்ற வேண்டும்.

*முதலாவது*, "தேவனை நாம் விசுவாசித்து, *அவர்* இருக்கிறார் என்று நம்ப வேண்டும்". "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத *காரியம்; ஏனென்றால்*, தேவனிடத்தில் சேருகிறவன் *அவர்* உண்டென்றும், *அவர்* தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." *(எபி 11:6)*.

மேலும் நாம், இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும், நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்க இயேசுவை தேவன் அனுப்பினார் என்றும் விசுவாசிக்க வேண்டும். "ஆகையால் நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோ. 8:24).

இரண்டாவதாக, நமது பாவத்திலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும். "அந்தப்படி நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக் 13:3) என்று இயேசு தெளிவாக கூறியிருக்கிறார். மனந்திரும்புவதின் பொருள் என்ன? இதை புரிந்துக்கொள்ள சில பகுதிகளை கவனிப்போம். முதலாவது, பாவம் என்றால் என்ன? என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, பாவம் நமக்கு என்ன செய்கிறது? என்று நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அது நம்மை தேவனுடைய ஐக்கியத்திலிருந்து பிரித்து, நித்திய தண்டனைக்குள்ளாக வாதிக்கிறது. பாவம் அறியாத இயேசுவை சிலுவையில் அறையப்படும்படி செய்தது. நமது பாவங்களுக்காக அவர் தன்னுடைய இரத்தத்தை சிந்த வேண்டியிருந்தது.

இந்த சத்தியத்தை நாம் நினைக்கும்போது, நாம் செய்ததைக் குறித்து நமக்கு வருத்தம் ஏற்படும். இந்த வருத்தம் மனந்திரும்புதல் அல்ல. ஆனால், அதினால் மனந்திரும்புதல் ஏற்பட ஏதுவுண்டு. "தேவனுக்கேற்ற துக்கம், பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" (2 கொரி. 7:10).

நம்முடைய பாவத்தின் மீதான உண்மையான துக்கம், நமது சிந்தனை மற்றும் செயல்படும் முறையை மாற்றும்படி செய்யும். இயேசுவுக்கு பாதையைச் சரிசெய்யும்படி வந்த யோவான், "மனந்திரும்புதலுக்கேற்ற கனியைக் கொடுங்கள்" என்று மக்களிடம் கூறினார். (லூக். 3:8). மற்ற வார்த்தையில் சொல்வோமானால் நமது வாழ்க்கை வழியில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும்.

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார்" (அப் 17:30-31).

*"ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி,"* ***(தீத்து 2:11,12).***

நாம் வாழும் வழியை மாற்றிக் கொள்ள (நமது சித்தத்திற்கு பதிலாக தேவனுடைய சித்தத்தை செய்யும்படி) தயாராக, இயேசு தேவனுடைய குமாரன் என்று மனுஷன் முன்பாக அறிக்கையிட தயாராக இருக்க வேண்டும் ***(மத். 10:32,33 ; அப். 8:37 ; 1தீமோ. 6:12).*** *"ஏனென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்".*

*நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்"* ***(ரோமர் 10:9-10).*** இந்த வசனம் இயேசுவின் மீதுள்ள விசுவாசம், மற்றும் அவரைப் பற்றி செய்ய வேண்டிய அறிக்கை ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது.

கடைசியாக, ஒருவர் தன்னுடைய பாவம் கழுவப்படும்படி செய்ய வேண்டியதில் திருமுழுக்கு இணைந்துள்ளது. ***மாற்கு 16:16*** ல் இயேசு *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."* என்றார்.

இரட்சிப்பு, ஒரு மனிதன் விசுவாசித்து திருமுழுக்கு பெற்ற பின்னரே கிடைக்கிறது. அது, இவ்விரண்டிலும் ஏதாவது ஒன்றை மாத்திரம் செய்வதினால் கிடைப்பதில்லை. பாவங்கள் கழுவப்படுவதற்கு முன் இவ்விரண்டுமே தேவை.

சுவிசேஷம் உலகம் எங்கும் பரவுவதின் மூலமாக, மக்கள் தங்களின் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்ற சில சம்பவங்கள், புதிய ஏற்பாட்டுப் புஸ்தகமான அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ளது. இயேசு பரமேறின பின்பு ***(அப். 1:9-11),*** அப்போஸ்தலர் மீது பரிசுத்த ஆவியானவர் வந்தபின் ***(அப். 2:1-4),*** பெந்தேகொஸ்தே என்னும் நாளில், முதல் சுவிசேஷ பிரசங்கம் செய்யப்பட்டது.

பேதுருவின் பிரசங்கம், அநேகரை, தாங்களே கிறிஸ்துவை (தேவனுடைய குமாரனை) சிலுவையில் அறைந்தனர் என்று உணர்த்தியது. அதன் பிறகு அவர்கள், மன்னிப்பு பெறும்படி என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டனர் ***(அப். 2:36-37).***

*"பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்"என்றார். (அப். 2:38)*

*"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்று கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப். 2:41).*

இந்த மக்கள் பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் இயேசுவே கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் அந்த உண்மையை விசுவாசித்ததால், அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்பினார்கள். மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று திருமுழுக்கு பெறுங்கள் என்று பேதுரு அவர்களுக்கு கூறினார்.

பாவத்திற்கான தீர்வு இன்றும் இதுவே. இன்று ஒருவர் பாவமன்னிப்பு பெற விரும்பினால், தன் பாவங்கள் கழுவப்படும்படியாக அவர் மனந்திரும்பி, திருமுழுக்கு பெற வேண்டும். நம் பாவங்களைக் கழுவக் கூடியது தண்ணீர் அல்ல; இயேசு தன்னுடைய சொந்த இரத்தத்தால் நமது பாவத்தைக் கழுவுகிறார் *(வெளி.1:15)*. நாம் திருமுழுக்கு பெறும் பொழுது அவர் நம் பாவங்களைக் கழுவுகிறார் *(அப். 22:18)*.

ஏன் அதைச் செய்யும்வரை காத்துக் கொண்டிருக்கிறார்? பாடம் 5 ந்த கேள்விக்கு தெளிவாக பதில் அளிக்கும். அதற்கான ஒரு காரணம் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அதற்கு நீங்கள் மனமுவந்து கீழ்ப்படிவீர்களா?

*"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன் படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு. 3:21).*

**நீங்கள் வேத வசனத்தின்படி திருமுழுக்கு பெற்றிருக்கிறீர்களா ?**

தயவுசெய்து கவனியுங்கள். நீங்கள் சிறு குழந்தையாய் இருக்கும்போது தெளிக்கப்பட்டீர்களா? என்று நாங்கள் கேட்கவில்லை. அநேகர் குழந்தையாய் இருக்கும் பொழுதே தண்ணீரினால் தெளிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தெளித்தல் வேதாகமத்தின்படியான திருமுழுக்கு அல்ல.

திருமுழுக்கிற்கு பதிலாக தெளித்தல் என்பது 3வது நூற்றாண்டில்தான் துவங்கியது. அது மனித பாரம்பரியத்தைச் சார்ந்ததே *(மத்.15:9)*. முழுக்குதலுக்குப் பதிலாக, தெளித்தல் ஞானஸ்நானத்தை முதன்முதலில் கி.பி. 250ல் பெற்றவர், நோவோட்டின் என்பவர்.

இரண்டாவது, நீங்கள் சரியான காரணத்திற்காக திருமுழுக்குப் பெற்றீர்களா? நாமகரண கூட்டம் அநேகவற்றில் அநேகர், தண்ணீரில் முழுக்கு பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தவறான காரணத்திற்காக தண்ணீரில் முழுக்குப் பெற்றார்கள். உள்ளான கிருபைக்கு வெறும் ஒரு வெளிப்புறமான அடையாளம்தான் திருமுழுக்கு என்று சிலர் சொல்லுகின்றனர். இந்த கொள்கையைக் கடைபிடிப்பவர்கள் தாங்கள் முன்னமே இரட்சிக்கப்பட்டதாகவும், அதற்கு அடையாளமாக திருமுழுக்கு பெறுவதாகவும் வாதிடுகின்றனர். அப்படிப்பட்ட போதனைகள், இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய அப்போஸ்தலருடைய நேரான, எளிமையான வார்த்தைக்கு எதிராக உள்ளது. *(மாற்கு 16:15; அப்.2:38; கலா. 3:27)*. மனிதருடைய பாரம்பரியமானது நம்முடைய தொழுகையையும் தேவனுக்கு நாம் கீழ்படிவதையும் அவர் ஏற்காதபடி பயனற்றதாக்குகிறது.

நீங்கள் சரியானதை செய்ய, வேதாகம முறைப்படி திருமுழுக்கு பெற விரும்பினால், வேதாகமத்து வழியில் உங்களுக்கு உதவ நாங்கள் ஆவலாய் இருக்கிறோம். நீங்கள் எங்களுடைய முகவரிக்கு எழுதவோ, அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவோ தயங்க வேண்டாம்.

# தண்ணீர் ஞானஸ்நானம்

## WATER BAPTISM

நம்மில் ஒருவர்கூட இரட்சிப்படைய தகுதியில்லாதிருந்தும், நாம் எல்லாரும் இரட்சிப்படைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் ***(2 பேதுரு 3:9).*** இரட்சிப்பை பெறதக்கதாக நற்கிரியைகளை ஒருவரும் செய்ய முடியாது. மாறாக, *நம் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறத்தக்கதாக தேவன் நிர்ணயித்த சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.*

இது, அவர் மீது விசுவாசம் வைத்தலும், பாவங்களிலிருந்து மனந்திரும்புதலும், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதலும், ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்படுதலும் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த நேரத்திலேயே இயேசுவின் இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவுகிறது.

அநேக மத அமைப்புகள், மற்ற எல்லா நிபந்தனைகள் (விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை) அனைத்தையும் ஏற்றுக் கொள்வார்கள்; ஆனால் ஞானஸ்நானத்திற்கும், இரட்சிப்பிற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லுவார்கள். இப்பாடமானது, இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்றும், அது ஏன் அவசியம்? என்றும் கூறுகின்றது. இதுவரை நாம் படித்த பாடங்களிலிருந்து, இரட்சிப்படைவதற்கான வழிமுறைகளில் முதலாவது, விசுவாசம் உருவாக வேதவாக்கியங்களை கேட்க வேண்டும் என தெளிவாக பார்த்தோம்.

ஆனால், ஒரு மனிதன் எந்த நேரத்தில் தன் பாவங்களில் இருந்து கழுவப்படுகிறார்? ஒரு மனிதன் எப்பொழுது தேவனை நம்புகிறானோ அப்பொழுதே இரட்சிக்கப்படுகிறான் என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், மனந்திரும்பும்போது அல்லது இயேசுவின் தெய்வீகத்தை அறிக்கை செய்யும்போதே இரட்சிப்பு வருகின்றது என்கின்றனர். மனிதர்கள் (நேர்மையான மற்றும் நல்ல மனிதர்கள்) சொல்வது முக்கியமல்ல. வேதாகமம் என்ன போதிக்கின்றது?

நாம் 4-வது பாடத்தில் பார்த்தது போல, பேதுரு பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெறும்படி ஜனங்களுக்குப் போதித்தார். இரட்சிப்பைப் பெறுவதற்கான ஆரம்ப வழிமுறை ஞானஸ்நானத்தில்தான் நிறைவு பெறுகிறது.

திருச்சபையை துன்பப்படுத்தி, பின்பு பவுலாக மாறிய சவுலைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தியபின், தமஸ்குவிலும் பிரச்சனையை உண்டுபண்ண அவர் பிரயாணம் பண்ணினார். வழியிலே அவர் பார்வையிழந்தார். மேலும் இயேசு வானத்திலிருந்து அவரிடம் பேசினார். தான் துன்புறுத்திய இயேசு, தேவனுடைய குமாரன் என்று சவுல் அப்போது உணர்ந்து கொண்டார் *(அப் 9:4-6)*. சரி, சவுல் இந்த நேரத்தில் உடனே இரட்சிக்கப்பட்டு விட்டாரா?

சவுல் மிகவும் மனந்திரும்பியிருந்தார்; அதனால் அவர் 3 நாட்கள் எதையும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை *(அப். 9:9)*. அவர் தன் நேரத்தை ஜெபிப்பதிலேயே தொடர்ந்து செலவிட்டார் *(அப் 9:11)*. இதில் ஏதாவது அவரை பாவத்திலிருந்து இரட்சிக்க முடிந்ததா? இல்லையே! அனனியா அவரிடம் வந்தபொழுது கூட, இன்னும் சவுலிடம் பாவம் இருந்தது. ஒருவர் உபவாசம் இருப்பதினாலோ, ஜெபம் செய்வதினாலோ, செய்த தவறுக்காக வருத்தப்படுவதினாலோ இரட்சிக்கப்பட முடியும் என்றால், இதற்குள் சவுல் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா?

ஆனால் அனனியா அவரிடம் இப்படிக் கூறுகிறார், *"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" அப். 22:16.* ஆகையால் சவுலினுடைய பாவங்கள் ஞானஸ்நானம் பெற்றபின்தான் முழுவதுமாக கழுவப்பட்டன. இப்படியாகத்தான் இரட்சிப்பின் வரிசை நிறைவானது.

இயேசு இந்த செயலை ஒரு சரீர பிறப்புடன் ஒப்பிடுகிறுர். ஒரு குழந்தை தன் தாயினுடைய கருவிலே உருவானபின் வளர வேண்டும்; மேலும் குழந்தை பிறந்த பின் அது உயிரோடு இருக்க வேண்டும். குழந்தை பிறந்த பின் வாழ்வின் முக்கிய காரியங்களை அதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை ("விதை" என்று *லூக். 8:11 ல்* சொல்லப்படுகிறது) ஒருவருடைய இருதயத்தில் விதைக்கப்படும்போது, அதை விளங்கிக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய முடிவெடுப்பதற்கு சில காலம் செல்லும். ஒருவர் ஞானஸ்நானம் பெற்றவுடனே, அவர் மறுபடியும் பிறந்து விடுகிறார் (ஒரு ஆவிக்குரிய பிறப்பு). இந்த சத்தியங்களை இயேசுவே நிக்கொதேமு என்ற ஒரு மனிதனிடம் கூறினார். *"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று*

*மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்"* என்று இயேசு அவனிடம் கூறினார் ***(யோ 3:5).***

"புதிதாக பிறக்கிற" வழிமுறையிலே ஞானஸ்நானம்தான் கடைசிப்படியாகும். பிலிப்பு பட்டணத்து சிறை அதிகாரிக்கு நடுராத்திரியிலே தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது ***(அப் 16:25).*** இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? என்று அவர் கேட்டபொழுது, சவுல் (தற்பொழுது அப்.பவுல்) பதிலாக, *"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்தில் தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய் அவர்களுக்குப் போஜனங் கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங் கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்"* ***(அப். 16:31-34).***

வேதவசனத்தை கேட்பது எவ்வளவு முக்கியமென்று பாருங்கள்; ஏனென்றால் அந்த சிறை அதிகாரி நடுராத்திரியில் அவனுடைய வீட்டாரனைவரையும் பவுல் கூறும் வசனத்தைக் கேட்கும்படி எழுப்பிவிட்டார். பவுல் கூறியவற்றில் ஞானஸ்நானம் அவசியம் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால், அந்த நடுராத்திரியில் இரண்டுங் கெட்ட நேரத்தில் அவர்கள் ஞானஸ்நானம் எடுத்திருக்கமாட்டார்களல்லவா? பாருங்கள்! "தேவனில் விசுவாசம் வைத்தபின்", அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு மகிழ்ச்சியாயிருந்தனர்.

அடுத்ததாக, நாம் எத்தியோப்பிய மந்திரியைப் பற்றி கவனிப்போம். *"அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அபொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே! நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்"* ***(அப் 8:35-36).***

இங்கே பாருங்கள்! இயேசுவைப் பற்றி சரியாக பிரசங்கித்தவுடன், அடுத்து ஞானஸ்நானத்தைப் பற்றி தான் சொல்லப்பட்டுள்ளது. இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கப்பட்டபின், யார் ஒருவரும் ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும்?

என்பதற்கு இதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது. அதாவது, "கிறிஸ்துவை போதிப்பது" என்பது, ஒருவருடைய பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுவதையும் உள்ளடக்குகின்றது.

சரி, இதைக்குறித்து வேதாகமம் இனிமேல் விளக்கமளிக்கட்டும். சுவிஷேசத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் அழிந்துபோவார்கள் என்று நமக்குத் தெரியும் *(2தெச.1:7)*. ஆனால் "சுவிஷேசத்திற்கு கிழ்ப்படிவது" என்றால் என்ன? சுவிசேஷம் என்பது – கிறிஸ்துவினுடைய பாடு, மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஆகியவற்றை குறிக்கிறது. *(1கொரி.15:1-4)*. நாம் அதற்கு எப்படி கீழ்ப்படியமுடியும்? நாம், அதற்கு ஒப்பனையான ஒரு போதனைக்குக் கீழ்ப்படிகிறோம். *(ரோமர் 6:17-18)*. நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். இயேசுவுடன் கூட நாம் பாவத்திற்கு மரிக்கிறோம். இயேசுவுடன் கூட நாம் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்படுகிறோம். நாம் "புதிய வாழ்வு" வாழும்படியாக வெளியே எழுந்திருக்கிறோம் *(ரோமர். 6:3-7)*. இப்படித்தான் ஒரு மனிதன் "சுவிசேஷத்திற்கு ஞானஸ்நானத்திலே" கீழ்ப்படிகிறார்.

அநேக மதப்பிரிவுகள், ஞானஸ்நானத்திற்குப் பதிலாக "தெளிப்பதை" மாற்றுகின்றனர்; ஆனால் *அடக்கம் என்பது ஒரு மனிதன் முழுமையாக மூடப்படுவதையே குறிக்கின்றது*. ஞானஸ்நானம் பெற விரும்பிய எத்தியோப்பிய மந்திரியை நினைத்துப் பாருங்கள். இப்படித்தான் இது நடந்தது.

*"இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (அப் 8:38,39)*.

அப்படியானால் ஞானஸ்நானம் என்பது, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தவர்களுக்கே உரியதாகும். அது ***மூழ்கி*** *(முழுவதுமாக தண்ணீரால் மூடப்பட்டிருத்தல்)* பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெறுவதாகும். மறுபடியும் பிறக்கின்ற செயல்முறையில் இது கடைசி நம்பிக்கையாகும். உங்களில் யாராவது ஞானஸ்நானம் பெறாமல் இருப்பீர்களானால், இரட்சிப்பைக்குறித்த இந்த பகுதிக்கு இப்பொழுது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

# சபை
## THE CHURCH

ஒரு மனிதன் பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற்றவுடன், அவர், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுகிறார் *(1கொரி. 6:11)*. ஆகையால், சுவிசேஷத்தின் மீது உள்ள விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் அவர் தேவனுடைய குமாரனாக மாறுகிறார்.

*"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே" (கலா. 3:26-27).*

ஒரு கிறிஸ்தவன், "புது சிருஷ்டி", பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின *(2 கொரி 5:17)* என்பதை நினைவில் கொள்வோம். கிறிஸ்தவன் பாவத்திற்கு மரித்தவன் (பழையவைகள் ஒழிந்து போயின). பாவ மனிதன் மரணத்துக் குட்படுத்தப்பட்டு மீண்டும் பிறக்கிறான் *(யோ 3:1-7)*.

*"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4)*

இந்த சமயத்தில், அடிக்கடி கேட்கப்படும் கேள்வி, "அப்படியானால் நான் இப்பொழுது (திருமுழுக்கிற்கு பின்) பாவம் செய்தால் என்ன நடக்கும்? நான் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா?". அது என்னவென்றால், ஒரு மனிதன் ஞானஸ்நானத்திற்குப் பின், அவர் செய்யும் எந்த பாவத்தையும் விட்டு மனந்திரும்பி, அதை தேவனிடத்தில் அறிக்கையிட்டால், *"பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோ 1:9)*. நாம் எல்லாவற்றிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறோமா என்று எல்லா பிரயாசத்தோடும் முயற்சி செய்யும் மிக முக்கியமான கடமை நமக்கு உண்டு.

*"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய*



3

*இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்"(1யோ 1:7)*

மற்றொரு விதத்தில் சொல்வோமானால், நாம் (ஞானஸ்நானத்திலே) அவருடைய இரத்தத்தோடு தொடர்பு கொள்ளும்போது, நாம் தேவனைப் பிரியப்படுத்த எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து நம்மை சுத்திகரிக்கும். அதாவது அன்பான கீழ்ப்படிதலினால் அவருடைய சத்திய வழியில் நடக்கையில்...

மற்றொரு ஆசீர்வாதம் என்னவென்றால், கர்த்தர் இப்படி இரட்சிக்கப்பட்ட மக்களை சபையில் சேர்க்கின்றார் *(அப் 2:47)*.

சபை என்றால் என்ன? அது மனிதன் உண்டாக்கிய ஒரு ஸ்தாபனம் அல்ல. வேதாகமம் அதை கிறிஸ்துவின் சரீரம் (உடல்) என்று சித்தரிக்கிறது. இந்த சரீரமாகிய மீட்கப்பட்ட மக்களை, விலைக்கு வாங்கும் தொகையை கொடுப்பதற்காக இயேசு மரித்தார். அவர் தன்னுடைய சொந்த இரத்தத்தின் மூலம் இதை விலைக்கு வாங்கினார் *(அப் 20:28)*. இந்த சபை அவருக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஏனென்றால், அவர் இதை ஊட்டம் கொடுத்து வளரச் செய்கிறார் *(எபே 5:29)*.

எபேசியருடைய புஸ்தகம் சபையைக் குறித்தும், இயேசுவிற்கும் சபைக்கும் உள்ள (உறவை) தொடர்பைக் குறித்தும் குறிப்பிடுகின்றது.

*"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு, அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே 1:22,23)* என்று பவுல் தேவனைப் பற்றிக் கூறுகிறார்.

மேலும் அவர், இயேசுதான் "சபைக்குத் தலைவர்" என்றும், *"சரீரத்தின் இரட்சகர்"* என்றும் கூறுகிறார் *(எபே 5:23)*. பின்பு பவுல் சபையைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் பல காரியங்களைக் கூறுகிறார்.

*"புருஷர்களே! உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே 5:25-27).*

இயேசு நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார். நம்மை நேசித்ததினால் மாத்திரம் அல்ல, நாம் கிறிஸ்தவர்களாய் வளர்ந்து, முதிர்ச்சியும் அடைய வேண்டுமென விரும்புகிறார் என்பது எளிமையாக நம்மால் பார்க்க முடிகின்றது. அதேப்போல், வேத வசனத்தில் எத்தனை சபை இருக்கிறது என்பதை நம்மால் எளிமையாக பார்க்க முடிகிறது. ஆம் ஒரே தலை (கிறிஸ்து), அதற்கு ஒரே ஒரு சரீரம் (சபை). இந்த உண்மையை பவுல், *"உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு"* ***(எபே 4:4)*** என்று கூறுகிறார். இது சரியான விளக்கத்தை நமக்குக் கொடுக்கிறது. உண்மைதானே! மனிதர்களாகிய நமக்கு கூட ஒவ்வொருவருக்கும், ஒரு சரீரத்திற்கு ஒரு தலைதானே இருக்கிறது.

அதேப் போல் சபை முழுவதற்கும் (ஒரே சபை) இயேசுவே தலைவர். புதிய ஏற்பாட்டில் ''சபை'' என்ற வார்த்தை, இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது, ஒரு வகையில் விசுவாசிகள் எல்லாரையும் கொண்டதாக எபேசியர் புத்தகத்தில் சொன்னபடி குறிக்கிறது. ஆனால் அநேக நேரங்களில், இது தேவனுடைய ஜனங்களடங்கிய பிராந்திய (Local) சபையையே குறிக்கும். அதாவது "தெசலோனிக்கேயில் உள்ள சபை" ***(1தெச 1:1)*** போன்ற அர்த்தத்தில் ஆகும். தனிப்பட்ட எல்லா தேவ ஜனமாகிய பிராந்திய சபைகளும் சேர்ந்து முழுமையான ஒரு சபையாகும். ஆனால் ஒவ்வொரு பிராந்திய சபையும், பூமியில் ஒவ்வொரு இடங்களில் உள்ள கிறிஸ்துவின் சபையாகும்.

அப்படியானால், எத்தனை வகையான சபைகள் உள்ளன? வேதாகமம் ஒரே ஒரு சபையைப் பற்றிதான் சொல்கின்றது. நினைவிருக்கட்டும்! எந்த இடத்தில் இருந்தாலும் சரி, கிறிஸ்துவினுடைய சரீரம் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று *எபே **4:4*** ல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக, இன்று அநேக பெயர்களுடன் பல சபைகளை ஒருவர் பார்க்க முடியும். இந்த மதப்பிரிவுகள் பைபிளில் இருந்து வந்தவை அல்ல. யாரோ ஒரு மனிதனோ, அல்லது ஒரு மனிதக்கூட்டமோ இவைகளை ஆரம்பித்தனர். ஆனால் ஆண்டவர் ஒரே ஒரு சரீரத்திற்குத்தான் தலைவர். பவுல் எழுதுகிறார், *"நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்"* ***(1கொரி 12:13)***.

நாம் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றவுடன், ஆண்டவர் நம்மை அவருடைய சபையில் சேர்க்கின்றார் *(அப் 2:47)*. ஆனால் நாம் நிறைய தவறான வழிமுறைகளையும் எண்ணங்களையும் அதனுடனே சேர்த்துவிட்டோம்.

டைபிளில் சொல்லப்பட்ட சத்தியங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய இலக்கானது *"ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தி இருக்க வேண்டும்" என்பதே! (1கொரி 1:10).*

கொரிந்துவிலே, கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் பிரிந்தபோது, பவுல் அவர்களை, ஆவிக்குரியவர்களாய் இல்லாமல் மாம்சத்திற்குரியவர்களாய் இருப்பதைக் குறித்து குற்றப்படுத்தினார்.

*"ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?" (1கொரி 3:4)*என்றார்.

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் அவருடைய சரீரத்திலே ஒன்றாயிருக்கிறார்கள். இந்த ஒற்றுமையைப் பற்றிதான் இயேசு ஜெபித்தார் *(யோ 17:20,21).* மேலும் அதைத்தான் எல்லா விசுவாசிகளும் விரும்புகின்றனர். முரண்பாடான நோக்கங்களுடைய வித்தியாசப்பட்ட ஆவிக்குரிய அமைப்புகளில் நாம் இடம் பெறும்படி ஆண்டவர் விரும்பவில்லை. ஒரு சரீரம், அதாவது ஒரு சபைதான் உண்டு. யூதர்கள் மற்றும் புறஜாதிகளும் கூட (ஒருவரை ஒருவர் எதிர்த்தவர்கள்), இப்பொழுது இந்த ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களாகத்தான் இருக்க முடியும்.

*பின்வரும் வாக்கியங்களைப் பாருங்கள் : "ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில், கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத்திலே காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர் களுமாயிருந்தீர்களென்று நினைத்து கொள்ளுங்கள்.*

*முன்னே தூரமாயிருந்த நீங்கள், இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானக்காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து." (எபே 2:11-14).*

இப்பொழுது, எங்குமிருக்கும் எல்லா மக்களும் (பணக்காரரோ, ஏழையோ; கறுப்போ, வெள்ளையோ; ஆணோ, பெண்ணோ) சபையில் ஒன்றாக இருக்க

முடியும் *(கலா 3:27-28)*. இப்படியே சொல்லிக்கொண்டு போகும்போது, பவுல், சபையானது ஒரு இரகசியம் என்றும், அது கால காலமாய் மறைந்திருக்கிறது என்றும், இப்பொழுதோ எல்லாருக்கும் தெரியவந்திருக்கிறது என்றும் கூறுகின்றார். *(எபே. 3:1-17)*.

பாருங்கள்! உலக ஆரம்பம் முதல் திட்டமிடப்பட்ட இந்த ஆவிக்குரிய இராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பது என்பது என்ன ஒரு பாக்கியம். *"ஒருவர் தேவனுடைய பிள்ளையென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள்" (1 யோ 3:1)*

அதுமட்டுமின்றி நமக்குப் பல பொறுப்புகள் உள்ளன. *முதலாவதாக,* பாவங்கள் கழுவப்பட்டபின், நம்மை நாமே சுத்தமாய் வைத்துக் கொள்ள தேவையான எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும் *(1யோ3:3)*. *இரண்டாவது,* மறுபடியும் பிறந்த நாம் ஆவிக்குரிய சபையிலே வளர வேண்டும் *(1பேதுரு 2:2)*. இப்படி வளரும்போது நம்முடைய இந்த முழு சரீரமாகிய சபையானது, சகல கணுக்களினாலும் இசைவாய்க்கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய் கிரியை செய்கிறபடியே" *(எபே 4:16)*.

நீங்கள் ஏற்கனவே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்களானால், நீங்கள் சபையில் ஒரு அவயவமாய் இருக்கும் ஆசீர்வாதம் பெற்றவர்கள். அடுத்து வரும் 2 பாடங்களில் நாம் ஆராதனை மற்றும் கிறிஸ்தவ ஜீவியம் பற்றிப் பார்ப்போம்.

## சில நாமகர்ணக்கூட்டங்களின் ஆரம்பம்

| பெயர் | ஸ்தாபகர் | இடம் | தேதி |
|---|---|---|---|
| ரோம கத்தோலிக்கம் | கான்ஸ்டான்டைன் | ரோமாபுரி | 4ம் நூற்றாண்டு |
| லுத்தரன் சபை | மார்டின் லூத்தர் | அகஸ்பர்க், ஜெர்மனி | 1530 |
| பிரஸ்பைட்டேரியன் சபை | ஜான் கால்வின் | சுவிட்சர்லாந்து | 1535 |
| ஆங்லிக்கன் சபை | கிங் ஹென்றி VIII | இங்கிலாந்து | 1535 |
| பாப்திஸ்து சபை | ஜான் ஸ்மித் | லண்டன், இங்கிலாந்து | 1607 |
| மெதடிஸ்ட் சபை | ஜான் வெஸ்லி | லண்டன், இங்கிலாந்து | 1729 |
| இவாஞ்சிலிகல் சபை | ஜேகப் ஆல்ப்ரைட் | பெனிசில்வேனியா, U.S.A. | 1803 |
| மார்மன் சபை | ஜேகப் ஸ்மித் Jr. | நியுயார்க், U.S.A. | 1830 |
| செவன்த்டே அட்வென்டிஸ்ட் | WM. மில்லர் & இலன் G. வொயிட் | மாசெசுசெட்டஸ், U.S.A. | 1831 |
| புதிய அப்போஸ்தல சபை | ப்ருயஸ் | ஹெம்பர்க், ஜெர்மனி | 1862 |
| யெகோவாவின் சாட்சிகள் | சார்லஸ் ரசல் | பெனிசில்வேனியா, U.S.A. | 1874 |
| பெந்தேகொஸ்தே பரிசுத்தம் | குழு | தென் கரோலினா, U.S.A. | 1898 |
| அக்லிபாயன் சபை | கிரோகிரியா அக்லிபே | பிலிப்பைன்ஸ் | 1902 |
| இக்லிசியா நி கிறிஸ்டோ 1914 | பெலிக்ஸ் மனாலோ | மணிலா, பிலிப்பைன்ஸ் | 1914 |
| அசெம்ப்ளி ஆப் காட் | குழு | ஆர்கன்சாஸ், U.S.A. | 1914 |
| பிலிப்பைன்ஸ் ஐக்கிய கிறிஸ்துவின் சபை | சோபரினா | பிலிப்பைன்ஸ் | 1948 |

**இயேசு சொன்னார்** : "... என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்." (மத் 15:13)

**சங்கீதக்காரன் எழுதினார்** : "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங் 127:1)

J.C. School of Evangelism (Madurai)

# உண்மையான தொழுகை

## (சத்தியத்தின்படியான தொழுகை)

## TRUE WORSHIP

கிறிஸ்தவனுக்கு தேவனோடு சிறந்த உறவு இருக்கிறது. திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் சபையோடு சேர்க்கப்படுகின்ற நாம் ஒவ்வொருவரும், சபையாகிய தேவகுடும்பத்தின் அங்கமாகின்றோம்.

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகின்ற ஒவ்வொரு நபரும், கிறிஸ்து எந்த ஆவிக்குரிய குடும்பத்திற்காக மரித்தாரோ, அந்த குடும்பத்தில் அங்கமாகின்றனர். நாம் தனியாக இருக்கும்பொழுது தேவனை தொழுது கொள்ள முடியும். குடும்பமாக நம் இல்லத்தில் தேவனை தொழுகை செய்யலாம். நாம் வாரத்தின் எந்த நாளிலும், நாளின் எந்த மணி நேரத்திலும், தேவனைத் துதித்துப் பாடல்களையும், ஜெபத்தையும் ஏறெடுக்கலாம். ஒரு ஆசாரியன் மூலமாகவோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நபரின் மூலமாகவோ, தேவனை தொழுகை செய்ய வேண்டியதில்லை. தேவனை எந்த இடத்திலும், எந்த மணி நேரத்திலும் தொழுது கொள்ளலாம்.

ஆனால், திருச்சபையாய் தேவனை தொழுதுகொள்ளும்படியாக வாரத்தின் முதல்நாளை அவர் குறித்திருக்கின்றார். தங்கள் பாவங்கள் மன்னிக்கப் படும்படியாக மூவாயிரம் ஆத்துமாக்கள் வாரத்தின் முதல்நாளிலே திருமுழுக்கு பெற்று ***(அப். 2:38-41)***, திருச்சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ***(அப். 2:47)***.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அந்த நாளில் இருந்து இன்றுவரை கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடி, தேவனை தொழுதுகொண்டு வருகின்றனர். நம் பாவத்தை மன்னிக்கும்படியாக சிலுவையில் மரித்த கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூறும்படியாகவும் தேவனுடைய வார்த்தையை படித்தும், பிதாவை நோக்கி கிறிஸ்துவின் மூலமாக ஜெபித்தும், நம் வருமானத்தின் அல்லது பொருளின் ஒரு பகுதியை தேவனுக்கு உற்சாகமாக கொடுத்தும், துதித்தும் தேவனை தொழுகை செய்து வருகின்றனர். உண்மையான *தொழுகையின் குணாதிசயங்களை* படித்த பின்பு, இவைகளை குறித்து தியானிக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை கவனமாக பார்க்கவும்.

## உண்மையான தொழுகையின் குணாதிசயம்:

*"ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றி விட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்" (யோசு. 24:14)*

*"நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள். அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்" (1 சாமு. 12:24)*

*"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." (யோ. 4:23,24)*

*"வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ. 3:17).*

முதல் மூன்று வசனங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகிறது. மூன்று வசனங்களிலும் *"உண்மை"* என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தொழுகை சரியானதாய் இருக்க வேண்டுமானால், அது உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

நான்காவது வசனத்தில் இந்த குறிப்பையும் பார்க்க இயலும். நாம் செய்கையினால் எதைச் செய்தாலும் (போதனை) அவை இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும் (அதாவது, இயேசுவின் அதிகாரத்தில்).

தேவனுக்கு ஏறெடுக்கப்படும் தொழுகையை தேவன் அங்கீகரிக்கவில்லை எனில், அது உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது. உண்மையான ஆராதனை என்பது, 'உங்கள் முழு இருதயத்தோடும்', 'ஆவியோடும்' இருக்க வேண்டும். அன்பில்லாத ஆராதனை என்பது சர்வவல்லமையுள்ள தேவனுக்கு

ஏறெடுக்கப்பட முடியாது. பழைய காலத்தில் அவருக்கு ஆராதனையை ஏறெடுத்தார்கள். ஆனாலும், "இதோ ! எவ்வளவு வருத்தம்" என்று சொல்லியதினால் அவர் (தேவன்) அவமானப்படுத்தப்பட்டார் என பார்க்கிறோம். *(மல்கியா 1:13).*

## கர்த்தருடைய பந்தி:

முதல் நூற்றாண்டிலே *(கி.பி.33)* திருச்சபையானது ஸ்தாபிக்கப்பட்டபோது, சீஷர்கள் (கிறிஸ்தவர்கள்) அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூடினார்கள் *(அப்.20:7; 2:42).* இவ்வசனம் கர்த்தரின் பந்தியைக் குறிக்கிறது. மேலும் இது, இயேசு சிலுவையில் நமக்காக மரித்ததை நினைவுகூரும்படி இருக்கிறது.

*பவுல், கொரியந்தியருக்கு அதின் நோக்கத்தை நினைவுபடுத்துகிறார். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*

*போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*

*ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11:23-26).*

இந்த நினைவுகூருதலில் உபயோகிக்கப்படும் புளிப்பில்லாத அப்பமானது, நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரின் சரீரத்தைக் குறிக்கின்றது. திராட்சரசமானது, நமக்காக சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தைக் குறிக்கின்றது. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் *(அப். 20:7 ; 1கொரி. 11:23-33)* இயேசுவின் பலியை நினைவுகூறும்படியாக நாம் ஒன்றாக கூடுகிறோம்.

## கொடுத்தல்:

*"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்கள்; அவர் ஐஸ்வரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐஸ்வரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8:9)*

*கடவுள் "உற்சாககமாக (சந்தோஷத்துடன்) கொடுப்பவர்களை" நேசிக்கிறார் (2 கொரி 9:7); மேலும் கிறிஸ்தவர்களாக நமக்கு கிடைத்திருக்கம் பாக்கியம் என்னவெனில், அவர் நம்மை ஆசீர்வதித்ததிலிருந்து அவருக்கு சிலதை திருப்பிக் கொடுப்பதே ஆகும். தங்கள் வருமானத்துக்கு (ஆசீர்வாதத்திற்கு) தக்கதாக வாரத்தின் முதல் நாளிலே கொடுக்கும்படி பவுல் கிறிஸ்தவர்களுக்கு கூறுகிறார். (1 கொரி 16 :1,2)*

## அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைநிற்றல்:

பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் திருமுழுக்கு பெற்றவுடன், அவர்களெல்லாருக்கும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என தெரியும். ஆனால் அவர்கள் புதிய ராஜ்யத்தின் உபதேசங்களை தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என அறிந்திருந்தனர். ஆகையால் அப்போஸ்தலர்கள், தங்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை அவர்களுக்குப் போதித்தனர் *(அப்.2:42)*. அவர்கள் ஏவப்பட்டதினால் எவைகளைப் பேசினார்களோ, எழுதினார்களோ, அவையனைத்தும் சத்தியமான (உண்மையான) தேவ வார்த்தைகள் *(1 தெச. 2:13)*. பெரோயா பட்டணத்தாரை போல நாமும் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய வேண்டும் *(அப்.17:11)*. ஏனென்றால் நாம் சத்தியத்தைத் தான் கற்றுக் கொள்கிறோம் என்ற உறுதி நமக்கு வேண்டும். மேலும் ஆவிக்குரிய வளர்ச்சியை நாம் பெறும்படி நாம் தேவனுடைய வார்த்தையை படிக்க வேண்டும் *(1 பேதுரு 2:2)*.

## ஜெபம்:

நாம் *"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்"* என்று பவுல் கூறுகிறார் *(1 தெச. 5:17)*. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவின் மூலமாக, தினந்தோறும் அநேகமுறை பரமபிதாவுடன் தொடர்பு கொள்ள வேண்டும் (வாரத்தின் முதல்நாள் திருச்சபை கூடும்போது கூட); தேவன் நம் நினைவிலும், இருதயத்திலும் எப்போதும் இருக்க வேண்டும். அவருடைய வல்லமைக்காகவும், கிருபையான இரட்சிப்பிற்காகவும், அவர் நம்மை எவ்வளவு தூரம் நேசிக்கிறார் என்பதை

அவருடைய வசனத்தின் மூலம் அறிந்து, நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். நாம் தேவனிடத்தில் விண்ணப்பங்களையும் வைக்கலாம். ஆனால் அது எப்பொழுதுமே நம்முடைய தன்னலத்திற்காக மாத்திரமே இருக்கக்கூடாது *(யாக். 4:3)*.

*"நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலி. 4:6-7).* ஜெபிக்கும்போது பரமபிதாவை நோக்கி ஆரம்பித்து, முடிக்கும்போது இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெபத்தை முடிக்க வேண்டும்.

## பாடுதல்:

கிறிஸ்தவர்களுக்கு ஒருவரோடொருவர் பேசும் கடமையும் உண்டு. *"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி" (கொலோ. 3:16).*

நாம் தேவனிடமும், ஒருவருக்காக ஒருவரும் பாட வேண்டும் என்று மாத்திரமே புதிய ஏற்பாடு நமக்கு அங்கீகாரம் கொடுக்கின்றது. மாறாக, அந்தப் பாடலுடன் இசைக்கருவிகளை பயன்படுத்தும்படி அது எங்குமே கூறியதில்லை. நினைவில் கொள்வோம்! நாம், இயேசு அங்கீகரித்ததை மாத்திரமே செய்ய வேண்டும் *(கொலோ. 3:17)*. இயேசுவோ, அவருடைய சீஷர்களோ ஆவிக்குரிய பாடல்களை இசைக்கருவிகளுடன் பாடினார்கள் என்பதற்கு, ஒரு ஆதாரம்கூட இல்லை.

## யெரொபெயாமின் பாவம்:

யெரொபெயாம் என்னும் ஒரு மனுஷன், தேவன் தன்னை ஆராதிக்க சொல்லியிருந்த முறையையே மாற்றினான் *(1 இராஜ. 12:25-53)*. இந்த முடிவு அவனையும் அவன் ஜனங்களையும் 'பெரிய பாவம்' செய்யவைத்தது *(2 இராஜா. 17:21)*. இவனுடைய உதாரணத்திலிருந்து, தேவன் தன்னை ஆராதிப்பதற்காக கட்டளையிட்டவற்றுடன் சேர்க்க ஒருவனுக்கும் உரிமை கொடுக்கவில்லை என்றும் நாம் பார்க்கிறோம். மேலும், அதிலிருந்து எதையும் எடுத்துப்போடவும் யாருக்கும் அதிகாரம் இல்லை. தேவன் நமக்கு தன்னை ஆராதிக்க கட்டளையிட்டபடி மாத்திரம் நாம் செய்ய வேண்டும்.

## தேவன் விக்கிரக ஆராதனையை வெறுக்கிறார் :

"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென்". (ரோமர் 1:18-25)

# கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு

## NEW LIFE IN CHRIST

பாவத்திற்கு மரித்து (மனந்திரும்பி), திருமுழுக்கிலே இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, புது வாழ்விற்காக அவரோடு எழுந்திருந்து நடப்பவனே கிறிஸ்தவர் *(ரோ. 6:4);* அவர் "மறுபடியும் பிறந்தவர்" *(யோ. 3:5).* நாம் பாவத்திற்கு மரித்தபடியினால், "ஆண்டவராகிய இயேசுவுக்குள்ளாக" நம்முடைய "தேவனுக்கென்று ஜீவிக்க வேண்டும்" என *(ரோ. 6:11).* இனி நமக்கு பாவம் ஒரு பிரச்சனையாக இருக்குமா?

"ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

*நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்" (ரோ. 6:12,13).*

நாம் *"கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டோம்" (கலா.2:20).* நாம் பாவம் நிறைந்த பழைய மனிதனை சாவுக்கு ஒப்புக் கொடுத்தோம்; நம்முடைய புதுவாழ்க்கையானது பழைய வாழ்க்கையைவிட வித்தியாசமாக இருக்க வேண்டும். நாம் மாற்ற வேண்டிய பல காரியங்கள் உள்ளன. தேவன் பரிசுத்தராயிருக்கிறார், ஆகையால் நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் *(1பேதுரு 1:14-16).* தேவன் நம்மை அசுத்தத்திற்கு அழைக்காமல், பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் *(1 தெச 4:7).*

நம்முடைய மனந்திரும்புதலினாலே, திருமுழுக்கின்போது, தேவன் நம்முடைய பாவங்களை கழுவிச் சுத்தமாக்கினார் *(அப். 22:16).* சபை என்னும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நாம் சேர்க்கப்பட்டோம் *(அப். 2:47).* நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில், தேவன் நமக்கு நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பையும் *(அப். 2:38),* நித்திய வாழ்க்கையும் கொடுத்துள்ளார் *(எபி. 5:9).* அவருடைய வாக்குறுதியில் நமக்கு நம்பிக்கை உண்டு *(கொலோ.2:12).*

*"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே! மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும்*

*நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2கொரி. 7:1).*

பவுல் கிறிஸ்தவ வாழ்வை, உடையை மாற்றும் ஒரு நபருடன் ஒப்பிடுகிறார் *(கொலோ. 3:1-17).* வயல்நிலத்தில், நாள் முழுவதும் வேலை செய்த ஒரு தொழிலாளியை நினைத்துக் கொள்ளுங்கள். அவன் உடைகள் அனைத்தும் அழுக்காகவும், உடல் முழுவதும் வியர்வையாகவும் இருக்கும் (பாவம் நம்மை ஆவிக்குரிய வகையில் அழுக்காக்கி விடும்).

அவன் வீட்டிற்கு வந்து, அழுக்கான உடையை கழற்றுகிறான். பின்பு அழுக்கான உடையை சலவைக்கட்டி (சோப்) உதவியுடன் கழுவி, பின்பு புது உடையை அணிகிறான். நாம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, திருமுழுக்கு பெறும் பொழுது, நம் பழைய உடையை களைந்து, கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுகிறோம்.

பின்பு, நாம் அழுக்காகவும், வியர்வையாகவும் உள்ள அதே பழைய உடையையே போட நினைப்போமா? ஒரு போதும் அப்படி செய்யமாட்டோம். மாறாக, நாம் நீதியின் ஆடையாகிய புதிய தூய்மையானதை உடுத்த விரும்புவோம். தேவன் நம்மை படைத்தாரே, அப்படிப்பட்ட பரிசுத்தமாய் இருக்க நாம் விரும்புவோம் *(1பேதுரு 2:9).* கீழ்வரும் வசனங்களில் பவுல் இதைக் கூறுகிறார்.

*"நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ. 3:1-3).*

நம்முடைய சிந்தனைகள் கூட மாற வேண்டும் *(2கொரி.10:5).* நாம் பூமிக்குரிய காரியங்களைவிட பரலோகத்திற்குரிய (ஆவிக்குரிய) காரியங்களைப் பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டும். நம்மை மறுபடியும் பாவத்திற்கு உட்படுத்தும் சிந்தனைகளை நாம் சாகடிக்க வேண்டும். *"விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை" (கொலோ. 3:5)*போன்றவைகளையே!

மேலும் பவுல் சொல்லும்போது, அழுக்கான உடையைப் போன்று களைந்து போடவேண்டியவற்றை குறிப்பிடுகிறார்.

